பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 03 செவ்வாய்க்கிழமை 17.06.2025 கதிர் 220

### இது ரகசியம் அல்ல!

வடக்கில் சுமார் 6 ஆயிரம் ஏக்கர் காணியை அரசுடமையாக்கும் வகையில் ஆளும்தரப்பு வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை எதிர்த்து பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் 2

## வீதியை நடந்து கடந்தோரை மோதித் தள்ளிய சொகுசு கார்

### இரு பெண்கள் சாவு; இரு சிறுமிகள் படுகாயம்

ஹொரணை- கொழும்பு பிரதான வீதியில், பாதையை கடக்க முற்பட்ட சகோதரிகள் இருவர் வேகமாக வந்த கார் மோதியதில் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்த பெண் ஒருவரின் 11,17 வயதுடைய இரு பெண் பிள்ளைகளும் காயமடைந்து களுபோவில வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொரலிம பகுதியில் உறவினர் ஒருவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட இரு பெண்களும் இரு சிறுமிகளும் அங்கிருந்த மற்றொருஉறவினரின்வீட்டிற்குச்செல்வதற்காக வீதியை கடக்க முற்பட்ட நிலையில் விபத்து சம்பவித்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஹொரணை கொழும்பு பிரதான வீதியில் கோனபொலவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த சொகுசு கார் ஒன்று இவர்களை மோதித் தள்ளியது.

இதன்போது பிரதேசவாசிகள் ஒன்றிணைந்து காயமடைந்தவர்களை 6

# கொள்கைத் தவறுகளுக்கு இடமில்லை சர்வதேச நாணய நிதியம் எச்சரிக்கை

## கொழும்பு வந்த கீதா எடுத்துரைப்பு

அதிகரித்து வரும் கட்டணங்கள், எரிபொருள்களின் விலைகளில் ஏற்பட்டுள்ள நிச்சயமற்றதன்மைமற்றும்மத்தியகிழக்கு பதற்றங்கள் என்பவற்றுக்கு மத்தியில் இலங்கை ஆளும்தரப்பு கொள்கை தவறுகளுக்கு இடமளிக்கக்கூடாது என்று சர்வதேச நாணய நிதியத்தின் ஹுனிய் இன் முதல் துணை நிர்வாக இயக்குநர் (ய்ம்னிம்) கீதா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

'இலங்கையின் மீட்புக்கான பாதை: கடன் மற்றும் நிர்வாகம்' மாநாட்டில் பேசிய அவர், நெருக்கடிக்குத் திரும்புவதைத் தடுக்க நிதி ஒழுக்கத்தின்அவசியத்தைவலியுறுத்தினார் மற்றும்நாணயநிதியத்தின்தொடர்ச்சியான கூட்டாண்மையை எடுத்துரைத்தார்.

இது இலங்கையின் இறுதி நாணய நிதியத் திட்டமாக மாறுவதை உறுதிசெய்ய அனைத்துபங்குதாரர்களிடமிருந்தும்கூட்டு உறுதிப்பாட்டை அவர் வலியுறுத்தினார், நிதியத்துடன் நாட்டின் 16 முந்தைய ஈடுபாடுகளைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதிஅநுரகுமாரதிசாநாயக்கஇந்த தொலைநோக்குபார்வையைஎதிரொலித்தார், 2028 ஆம் ஆண்டுக்குள் இலங்கை 2

# இலங்கையின் பொருளாதார மீட்பில் உறுதியான பங்காளியாக இருப்போம்

## சர்வதேச நாணய நிதிய பணிப்பாளர் கீதா உறுதிமொழி

இலங்கையின்பொருளாதாரத்தைமீட்டெடுக்கவும்ஆளும்தரப்பின் பொருளாதாரச் சீர்திருத்த வேலைத் திட்டத்திற்கும் சர்வதேச நாணய நிதியம் உறுதியான பங்காளியாக இருக்கும் என அந்த நிறுவனத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி கீதா உறுதியளித்துள்ளார்.

கடுமையான நெருக்கடியிலிருந்து நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை அடைந்துள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையும் அவர் பாராட்டினார்.

இலங்கைக்கு அண்மையில் நிதி நெருக்கடியிலிருந்து மீள வழிகாட்டிய சர்வதேச நாணய நிதியம் தொடர்ந்து வழங்கிய ஆதரவுக்கு அரசுத் தலைவர் இதன்போது நன்றி தெரிவித்தார். புதிய முதலீடுகளை ஈர்ப்பதற்கும் மக்களை மையமாகக் கொண்ட பொருளாதார நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்கும் அரசுத் 6

## அரச தலைவர் நிதியத்திலிருந்து ஜேவிபியினரும் நிதி பெற்றனர்

### உண்மையை உடைக்கிறார் தயாசிறி

அரசுத் தலைவர் நிதியத்திலிருந்து 2004 - 2008 காலப்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணியினரும் (ஜே.வி.பி.) நிதி உதவிகளைப் பெற்றுள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அவர் நேற்று தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவுக்குச் சென்றதன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2008ஆம் ஆண்டிலிருந்து 2024 வரை அரசுத் தலைவர் நிதியத்திலிருந்து உதவி பெற்றவர்களின் பெயர் பட்டியலை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். 2004 முதல்- 2008 வரை அரசுத் தலைவர் நிதியத்திலிருந்து உதவி பெற்றவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்படவில்லை.

இந்தக்காலப்பகுதிஜே.வி.பி. அப்போதைய ஆளும்தரப்பில் அங்கத்துவம் வகித்த காலப்பகுதியாகும். எதற்காக இந்த 4 வருடங்களை தவிர்த்து பெயர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது? அவ்வாறெனில் அந்த 4 ஆண்டுகளில் ஏதேனும் மோசடி இடம்பெற்றுள்ளதா? இது குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக தகவல்களைக் கோரியிருந்தேன். எனினும் 5 மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் அந்தத் தகவல்கள் வழங்கப்படவில்லை.

இந்தக் காலப்பகுதியில் சில ஜே.வி.பி.யினரும் இந்த அரசுத் தலைவர் நிதியத்திலிருந்து நிதியுதவி பெற்றுள்ளதாக எமக்குத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. 6 மாதங்களின் பின்னர் நாம் கோரிய தகவல்களை வழங்க முடியாது 3

## இரகசிய வாக்கெடுப்பாலேயே கொழும்பில் தோல்வி ஏற்பட்டது

### ஐக்கிய மக்கள் சக்தி இப்படி விளக்கம்

மாகாண ஆணையாளர் ஒருதலைப்பட்சமாக செயற்பட்டு, இரகசிய வாக்கெடுப்புக்கு சென்றதாலே எமக்கு பின்னடைவு ஏற்பட்டது. பகிரங்க வாக்கெடுப்புக்கு சென்றிருந்தால் நிச்சயமாக நாங்கள் வெற்றி பெற்றிருப்போம் என கொழும்பு மாநகர சபை மேயர் தெரிவுக்கு போட்டியிட்டு தோல்வியடைந்த ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ரிஸா சரூக் தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபையில் நேற்று மேயர்தெரிவுஇடம்பெற்றபின்னர் 2

## கொழும்பு மக்கள் கௌரவமாக வாழத்தக்க வகையில் மாற்றம்

### இது தனது நோக்கம் என்கிறார் புதிய மேயர்

கொழும்புவாழ்மக்கள்கௌரவமான முறையில் வாழமுடியுமான வகையில் மாற்றத்தை ஏற்படுத்துவதே எமது நோக்கம். அதனை எங்களால் மாத்திரம் செய்ய முடியாது அதனால் அதற்கான எமது வேலைத்திட்டத்துடன் எதிர்க்கட்சிகளும்கைகோர்த்துக்கொள்ள வேண்டும் எனகொழும்பு மாநகர சபையின் மேயராக தெரிவாகிய விராய் கெளி பல்தசார். 2

## 2028 முதல் சொந்த முயற்சியில் கடனைச் செலுத்துவதே திட்டம்

### அதற்காக கடினமாக உழைப்பதாக அரசுத் தலைவர் தெரிவிப்பு

2028ஆம் ஆண்டளவில் நாம் செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடன்களை சொந்த முயற்சியின் மூலம் செலுத் தக்கூடிய பொருளாதார வளர்ச்சி மற்றும் உறுதிப்பாடு நாட்டில் உருவாக்கப்படும். ஒரு தேசமாக சுயாட்சி மற்றும் இறையாண்மையை அடைவதே இறுதி பெறுபேறாக இருக்க வேண்டும். அதற்காக மிகவும் கடினமான மற்றும் கைவிடாத முயற்சியில் எனது தலைமையிலான ஆளும்தரப்பு ஈடுபட்டுள்ளது.அரச அதிகாரிகள் மற்றும் பிரஜைகள் என அனைவரின் ஆதரவையும் இதற்கு எதிர்பார்க்கிறோம் என அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அரசுத் தலைவர் நேற்று முற்பகல் கொழும்பு ஷங்ரி-லா ஹோட்டலில் நடைபெற்ற 'இலங்கையின் மீட்சிக்கான பாதை:கடன் மற்றும் நிர்வாகம்' என்ற கருத்தரங்கில் பிரதான உரை நிகழ்த்தும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சில வருடங்களுக்கு முன்பு ஒரு நாடாக நமது நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மிக 2

# தமிழ் அரசுக் கட்சியின் முடிவை மீறிச் செயற்படும் சபை உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

## செயலாளர் சுமந்திரன் அறிக்கை

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முடிந்த பின்னர் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுகூடி சில முடிவுகளை எடுத்தது. சபைகளில் ஆட்சியமைப்பது குறித்த அந்த முடிவுகள் பகிரங்கப்படுத்தப்பட்டு, அதன்படி கட்சியின் தலைவர், செயலாளர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இந்த நிலையில், கட்சித் தலைமையின் முடிவுக்கு மாறாக மூலக்கிளை, தொகுதிக் கிளை, மாவட்டக் கிளையின் முடிவு என்று கூறிக்கொண்டு உள்ளூராட்சி உறுப்பினர்கள் யாராவது செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக கட்சி உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் என்று அறிவித்துள்ளார் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன்.

கட்சியின் முடிவுக்கு மாறாக சபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பில் சில மாவட்டங்களிலும்தொகுதிகளிலும்உள்ளகட்சித் தலைவர்கள் நடவடிக்கை எடுத்து வருவதை அடுத்தே செயலாளர் இந்த அறிக்கையை விடுத்துள்ளார். உள்ளூராட்சிச் சட்டங்களின் அடிப்படையில் கட்சி உள்ளூராட்சி சபை உறுப்பினர் ஒருவரை நீக்கினால், அவரது உள்ளூராட்சி சபை பதவியும் பறிபோகும். இந்தப் பின்னணியிலேயே கட்சி முடிவை மீறும் உறுப்பினர்கள் மீது கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று கட்சி அறிவித்துள்ளது. இது தொடர்பில் 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அரசுத் தலைவர் சட்டத்தரணியான சுமந்திரன் தாக்கல் செய்த வழக்கு இன்று உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

மார்ச் 28 இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. 3 மாத காலத்திற்குள் இந்தக் காணிகளுக்கு உரித்தானவர்கள் உரிமை கோரவில்லை என்றால் அவை அரசுடமையாகும் என்று வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் காலக்கெடு ஜூன் 28 முடிவடைகின்றது.

அதற்கிடையில் அதனை மீளப்பெறுவதாக ஆளும்தரப்பு அறிவித்தது. காணிகளை அரசுடமையாக்கும் செயற்பாடு இடைநிறுத்தப்படுகின்றது என்றும் மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாதுஎன்றும்அமைச்சுமூலம்முதலில் அறிவிக்கப்பட்டது. பின்னர், வர்த்தமானியை மீளப்பெறுவதாக அமைச்சரவைத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் காணி அமைச்சு சட்டமா அதிபரிடம் கேட்டிருந்த ஆலோசனைக்கு ஏற்ப இது குறித்து அமைச்சர்களின் கருத்தை அறியும்படி சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், வர்த்தமானி அறிவித்தல் மீளப்பெறப்படவில்லை.

இன்னும் 11 நாட்களுக்குள் இந்த வர்த்தமானி மீளப்பெறப்படவில்லை என்றால், அறிவிக்கப்பட்ட காணிகள் அனைத்தும் அரசுடமையாகிவிடும். இதனை எதிர்த்து சட்டப் போராட்டமும் அறவழிப் போராட்டமும் இடம்பெறும் என்று தமிழ் அரசுக் கட்சி அறிவித்திருந்தது. அதற்கமைய வர்த்தமானிஅறிவித்தலைதடைசெய்யக்கோரி சுமந்திரன் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். வழக்கின் முக்கியத்துவத்தை விளக்கி எடுத்துரைத்து அவரது தரப்பினர் எடுத்த கடும் முயற்சியின் பின்னர் வழக்கு இன்று விசாரணைக்கு வருகின்றது.

இன்றையவாதத்தின்பின்னர்வர்த்தமானி அறிவித்தலின் மீது உயர் நீதிமன்றம் இடைக்காலத்தடைபிறப்பிக்கவில்லையாயின் ஆளும்தரப்பு அறிவித்தபடி உரிமை கோரப்படாத காணிகள் அனைத்தும் சட்டப்படி அரசுடமையாகிவிடும். இதனால் இன்றையதினம்எப்படியும்இந்தவர்த்தமானி அறிவித்தல் மீது இடைக்காலத் தடை உத்தரவைப் பெறுவதற்குற சுமந்திரனும் அவரது தரப்பினரும் கடும் முயற்சி செய்வர்.

..................................

தமிழ் அரசுக் கட்சிக்குள் மீண்டும் நாடாளுமன்றத் தேர்தல் காலத்துக் காய்ச்சல் தீவிரமாகி இருக்கின்றது. நாடாளுமன்றத் தேர்தலின்போதும் கட்சிக்கு யாழ்ப்பாணத்தில் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் மட்டும் கிடைத்தால்போதும், கட்சி தோற்கவேண்டும் அப்போதுதான் கட்சியைத்தமது கட்டுப்பாட்டில் எடுக்கமுடியும் என்று பகிரங்கமாகக் கூறிச் செயற்பட்டது ஒரு தரப்பு. கட்சி தோற்று தாங்கள் மட்டும் வென்றால் போதும் என்று நாடாளுமன்றத் தேர்தலில் செயற்பட்ட அதே தரப்பினர் இப்போது யாழ்ப்பாணத்தின் தீவகத்திலுள்ள பிரதேச சபைகளிலும் வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச சபையிலும் அதே குழப்பங்களை ஏற்படுத்துவதற்கான கைங்கரியங்களில் குதித்துள்ளனர் என்று தெரிகிறது. இது தொடர்பாக ஆங்காங்கே பல சந்திப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தச் சந்திப்புக்களில் கட்சியின் தலைமையின் முடிவுக்கு எதிராகச் செயற்படுவதன்மூலம்கட்சியைத்தோற்கடித்து, அதன் ஊடாகத் தாம்தான் உண்மையான தமிழ்த் தேசியவாதிகள் என்று மக்களை ஏமாற்றி தமது வாக்கு வங்கிகளைத் தக்க வைத்துக்கொள்ளலாம் என்பதே அவர்களின் முதன்மைத் திட்டம் தீவிரமாக ஆராயப்பட்டிருக்கின்றது.

தமதுசந்திப்புக்களிலும்அவர்கள்அதனைத் தெளிவாகத் தெரிவித்திருக்கின்றார்கள். இதில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஒருவர். கட்சியின் தீவக அமைப்பாளரும் இந்த விடயத்தில் முனைப்பாக, மும்முரமாக நின்று செயற்படுகின்றார் என்று தகவல். ஏற்கனவே கட்சியின் தீவகக் கிளையிலிருந்து செயற்பட்டு, கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது சைக்கிள் கூட்டணிக்குத் தாவிய சிலருடன் கூட்டுச் சேர்ந்துகொண்டு இந்த முயற்சிகள் நடக்கின்றன.

கட்சி முடிவுக்கு எதிராகச் செயற்பட்டு தீவகத்திலும் கோப்பாயிலும் வேறு தரப்புக்களுடன்சேர்ந்துஆட்சியைப்பிடிப்பதன் மூலம் கட்சியை மற்ற எல்லா இடங்களிலும் தோற்கடிப்பது குறித்து இந்தக் கூட்டங்களில் ஆராயப்பட்டுள்ளது. அதாவது கட்சிக்கு இப்போது ஆதரவு தரும் சில தரப்புக்களைக் குழப்பும்விதத்தில்தீவகத்திலும்கோப்பாயிலும் செயற்படுவதன் மூலம் மற்றைய எல்லாச் சபைகளிலும் அந்தத் தரப்புக்களின் ஆதரவை கட்சி இழப்பதற்கான வழிவகையை ஏற்படுத்தி கட்சியைத் தோற்கடிப்பதே இந்தத் தரப்புக்களின் அடிப்படைத் திட்டம். இதன் மூலம் கட்சியின் தற்போதைய தலைமையை வீழ்த்தி கட்சியை வீழ்த்திவிடலாம் என்றும் இவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

கட்சித் தலைமையால் தங்களை ஒன்றும் செய்யமுடியாதுஎன்றும்,தாங்கள்உள்ளூராட்சி சபைஉறுப்பினர்களுக்குஉறுதுணையாகவும் பாதுகாப்பாகவும் இருப்பார்கள் என்றும் உசுப்பேற்றிவிட்டுள்ளனர். ஆனால் பாவம் இவர்களை நம்பி காரியத்தில் இறங்க யாராவது உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் முன்வந்தார்களானால் அவர்களின் கதி மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்கிய கதையாகத்தான் முடியும்.

கட்சியைப்பலவீனப்படுத்திவீழ்த்திவிட்டால், அதன் பின்னர் கஜேந்திரகுமார் தலைமையிலான தற்போதைய அணியில் சென்று ஐக்கியமாகி, இன்னும் ஓ-ரிரு பதவிக் காலங்களுக்குத் தமது பதவிக் கதிரைகளை உறுதிப்படுத்திக்கொள்ளலாம் என்பதே இந்தத் தரப்பினரின் கெட்டதிட்டம் என்று கட்சியின் விசுவாசிகள் பொங்குகின்றார்கள்.

எது எப்படியோ இந்த எல்லாத்

## கொள்கைத்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தன்னிறைவு பெற்ற வளர்ச்சி மற்றும் கடன் திருப்பிச் செலுத்தும் திறனை அடையும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினார்,

## கொழும்பு.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு மாநகர சபையில் நேற்றும் இடம்பெற்ற மேயர் தெரிவுக்கான வாக்களிப்பில் மேயராக வெற்றி பெற்ற பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்களுக்கு கிடைத்த இந்த வெற்றி,கொழும்பு மக்களுக்கு கிடைத்த வெற்றியாகும். மக்கள் நீண்டகாலமாக இந்த மாற்றத்தை எதிர்பார்த்து வந்தார்கள். அதனால் வரலாற்று வெற்றியாகவே நாங்கள் இந்த வெற்றியை பார்க்கிறோம்.கொழும்பில் வாழும் அனைத்து மக்களும் கௌரவமாக வாழமுடியுமான வகையில் மாற்றத்தை ஏற்படுத்துவதே எமது குறிக்கோளாகும். தேர்தலில் நாங்கள் மக்களுக்கு நளித்த வாக்குறுதியின் பிரகாரம்கொழும்பில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த பாடுவடுவோம்.

நாங்கள் மக்களுக்கு வாக்களித்த பிரகாரம்கொழும்பு நகரை மாற்றியமைக்க எங்களால் மாத்திரம் முடியாது. அதற்காக எமது வேலைத்திட்டத்துடன் கைகோர்த்துக்கொள்ளுமாறு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும்அழைப்பு விடுக்கிறேன். நாங்கள் அனைவரும் இணைந்தே கொழும்பு அபிவிருத்தி செய்ய வேண்டும். அதற்காக மக்களின் ஆதரவும் எமக்கு தேவையாகும். மக்களின் ஆதரவு இல்லாமல் இந்த நகரை அபிவிருத்தி செய்ய முடியாது. அதனால் வளமான நாடு அழகான வாழ்க்கை அமைப்பதற்கு இன்று முதல் நாங்கள் தயாராகுவோம்- என்றார்.

## 2028 முதல் ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆழமான நெருக்கடியின் விளைவுகளை நாம் எதிர்கொண்டோம். அதன்போது நாம் தேர்ந்தெடுக்க இரண்டு பாதைகள் இருந்தன. பழைய தோல்வியுற்ற மற்றும் அழிவுகரமான பாதையில் தொடர்வதா அல்லது நமது நாட்டை மீண்டும் வெற்றிபெறச் செய்ய புதிய பாதையைத் தேர்ந்தெடுப்பதா என்ற இரண்டு விடயங்கள் நமது முன்னே இருந்தன.

இன்றுநாம்தேர்ந்தெடுத்தபாதைநாட்டிற்கு மிகப்பெரியவெற்றியைக்கொண்டுவந்துள்ளது என்பதை நாம் அனைவரும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்க முடியும். அதில், அரசியல் அதிகாரத்திற்கு ஒரு பொறுப்பும் கடமையும் உள்ளது. அதேபோல் மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சு போன்ற அரச நிறுவனங்களுக்கும் மிகப்பெரிய பொறுப்பு இருந்தது. மேலும் இந்த மறுசீரமைப்புகளின்போது, பாதிக்கப்பட்ட மக்களுக்கே இதில் மிகப்பெரிய பங்கு இருந்தது. அவர்கள் இந்த நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காக பெரும் தியாகங்களையும் அர்ப்பணிப்புகளையும் செய்தனர்.

இன்று ஒரு நாடாக நாம் பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளோம். கடன் மறுசீரமைப்பை நிறைவு செய்ய முடிந்தது. மேலும் குறிப்பிடத்தக்க காலத்திற்கு டொலரை நிலையாக பேண முடிந்தது. எதிர்பார்க்கப்படும் அரச வருமானத்தை ஈட்டவும் எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு கையிருப்புக்களை உருவாக்கவும் முடிந்தது. இவ்வாறு மேலோட்டமாகப் பார்த்தால் பொருளாதாரக் காரணிகளில் மிகவும் வலுவான நிலைபேற்றுத் தன்மையை பார்க்க முடிகிறது. ஆனால் நெருக்கடியின் ஆழமான காயங்கள் இன்னும் ஆறவில்லை. உள்நாட்டில்நெருக்கடிஇன்னும்நீங்கவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலோட்டமாக ஸ்திரத்தன்மை இருந்தாலும் அந்த நிலைமையை ஸ்திரப்படுத்தவும் பொருளாதாரத்தை அது இருக்கும் இடத்திலிருந்து உயர்த்தவும் புதிய மறுசீரமைப்புகளும் பொருளாதார கட்டமைப்பில் மாற்றங்களும் அவசியம் ஆகும். பல முக்கியமான காரணிகள் குறித்து நான் கவனம் செலுத்த விரும்புகிறேன்.

நமது நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்கவும் இந்த நெருக்கடியை வெற்றி கொள்ளவும் ஒரு வலுவான அரச சேவை அவசியம். ஆனால் அந்த அரச சேவைக்காக நாம் சுமக்கும் செலவு மிகப்பெரியது. இன்று நாம் சுமக்கக்கூடாத ஒரு செலவைச் சுமக்கிறோம். எனவே, வலுவான அரச சேவையை உருவாக்குவதோடு, பிரஜைகளுக்கு மிகக் குறைந்த செலவில் அந்த சேவையை வழங்குவதே எங்கள் எதிர்பார்ப்பு. சில அரச நிறுவனங்கள் மூடப்பட வேண்டும் என்று நாங்கள் ஏற்கனவே முடிவு செய்துவிட்டோம்.

எனினும் அரசு தேவைக்காக நாம் அதிக ஒதுக்கீடுகளை மேற்கொள்கிறோம். பலமான நாட்டை கட்டியெழுப்புவதற்காக பொதுமக்களுக்கு குறைந்த செலவில் சேவைகளை வழங்கும் சவால் எமக்குள்ளது. சில அரச நிறுவனங்களை மூடுவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம். சில வருடங்களுக்கு முன்னர் அப்போதைய பொருளாதாரத்துக்கு அமைய அந்த நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கலாம். இன்று அந்த பொருளாதார நிலைமை மாற்றம் பெற்றிருக்குமாயின் அந்த நிறுவனங்களை நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஒரு விடயத்தை மேற்கொள்வதற்காக பல நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இவற்றை ஒரு நிறுவனமாக இணைக்க வேண்டும். சில நிறுவனங்களின் போக்குகளை மாற்ற வேண்டும்.இலஞ்ச ஊழல் செயற்பாடுகளை தோற்கடிக்க வேண்டும்.

எனவே மேலோட்டமாக ஸ்திரத்தன்மை இருந்தாலும்இ அந்த நிலைமையை ஸ்திரப்படுத்தவும் பொருளாதாரத்தை அது இருக்கும் இடத்திலிருந்து உயர்த்தவும் புதிய மறுசீரமைப்புகளும் பொருளாதார கட்டமைப்பில் மாற்றங்களும் அவசியம் ஆகும். எனவே தற்போதைய பொருளாதார நிலைமையை உறுதிப்படுத்திஇ இந்த நிலைமையை இன்னும் வலுப்படுத்தும் ஒரு பெரிய பணி நமக்கு உள்ளது என்று நாங்கள் நம்புகிறோம்.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு சர்வதேச நாணய நிதியம் வழங்கிய ஆதரவிற்கும் ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் எமது மக்களின் பொறுத்துக்கொள்ளும் அர்ப்பணிப்புக்கும் நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். நான் முன்பு கூறியது போல சர்வதேச நாணய நிதியத்துடன் நீடிக்கப்பட்ட கடன் வசதியின் கீழ் முன்னெடுக்கும் கடைசித் திட்டமாக இதை மாற்றுவதே எமது நோக்கம். அதற்கான எதிர்பார்ப்பு எங்களுக்கு உள்ளது. 2028 ஆம் ஆண்டுக்குள் எங்கள் கடன்களை திருப்பிச் செலுத்தத் தேவையான பொருளாதார வளர்ச்சி மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்கும்எதிர்பார்ப்புஎங்களுக்குஉள்ளது.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த இடத்தில் நாட்டின் இறையாண்மை நிலைத்திருக்காது. பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த இடத்தில் சுயாட்சிநிலைத்திருக்காது.நாம்விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நமது சுயாட்சியையும் இறையாண்மையையும் இழந்துவிட்டோம். எனவேஇதன்இறுதிவிளைவாகஒருதேசமாக நாம்சுயாட்சியையும்இறையாண்மையையும் பெற வேண்டும். அதற்காக ஒரு கடுமையான முயற்சி உள்ளது. விட்டுக்கொடுக்காத ஒரு முயற்சி உள்ளது.

அதற்காக நிறைவு செய்ய வேண்டிய ஒரு பணி உள்ளது.அந்தப் பணியை செய்வதற்கு அரசியல் அதிகாரமாக எமது பங்களிப்பும்இ அரச அதிகாரிகள் என்ற வகையில் உங்கள் பொறுப்பு மற்றும் பொதுமக்களாக உங்கள் ஆதரவையும் நான் எதிர்பார்க்கிறேன் என்றார்

## தமிழ்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்குக் கட்சி ஏற்கனவே தனித் தனிக் கடிதங்கள் மூலமும் அறிவித்துள்ளது.

இருப்பினும்யாழ்ப்பாணம்தீவகப்பகுதியில் கட்சி முடிவுக்கு மாறாகச் செயற்படுவதற்கான முன்னேற்பாடுகளில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உள்ளிட்ட சில தரப்பினர் ஈடுபடுகின்றனர் என்று நேற்று தகவல்கள் வெளியாகி இருந்த நிலையில், கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் செயலாளர் பகிரங்க அறிவித்தலையும் விடுத்துள்ளார்.

"உள்ளூராட்சிசபைகளில்நிர்வாகங்களை ஏற்படுத்துவது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு இரண்டு தடவைகள் கூடி, விரிவாக ஆராய்ந்து தீர்மானங்களை எடுத்து இருக்கின்றது. அந்தத் தீர்மானங்களே கட்சியின் முடிவுகள். அவற்றையே கட்சியின் தலைவரும் செயலாளரும் உறுப்பினர்களுக்கு அறிவித்து முன்னெடுக்கின்றனர். அவற்றையேகட்சியின் முடிவாகக் கருதி முனெடுக்க வேண்டியது கட்சி உறுப்பினர்களின் கடமையாகும்.

தொகுதிக்கிளைகள், மாவட்டக்கிளைகளின் தீர்மானங்கள் என்ற பெயரில் கட்சியின் முடிவுக்கு மாறாக ஏதேனும் செயற்பாடுகளை, நடவடிக்கைகளை உறுப்பினர்கள் முன்னெடுத்தால், அவர்களுக்கு எதிராக உடனடிக் கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்‘‘- என்று செயலாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரகசிய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்ற தேர்தலில் நூற்றுக்கு 50 வீத வாக்குகள் பெறாத சபை ஒன்றில் மேயர், பிரதி மேயர். தலைவர் மற்றும் பிரதி தலைவர்தெரிவுசெய்வதுதொடர்பில்சட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதேநேரம் கடந்த இரண்டுமாதங்களுக்கு முன்னர் அரசநிர்வாக திணைக்களத்தினால்இவ்வாறானசபைகளில் பதவிகளுக்குஆட்களைதெரிவுசெய்யும்போது அர உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டிய முறை தொடர்பில் செயலர்வுகள் நடத்தப்பட்டு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரமே பெரும்பான்மை இல்லாத சபைகளில் மேயர்கள், தலைவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தேர்தலில் பெரும்பான்மை இல்லாத சபைகளுக்கு மேயர், பிரதி மேயர், தலைவர், பிரதி தலைவர் தெரிவு செய்வதற்கு உள்ளூராட்சி மன்ற சட்டத்தில் இரண்டு முறைகள் காணப்படுகின்றன. ஒன்று பகிரங்க வாக்கெடுப்பு, மற்றது இரகசிய வாக்கெடுப்பு. அந்த வாக்கெடுப்பில் எதனை தெரிவு செய்வது என்பதில் பகிரங்க வாக்கெடுப்புக்கே செல்ல வேண்டும். அதுதான் முறை. ஆனால் சபைக்கு தலைமை தாங்கிய மாகாண ஆணையாளர், ஆளும்தரப்புக்கு சோரம் போகும்வகையில், ஒருதலைப்பட்சமான தீர்மானத்துடனே சபைக்கு வந்திருந்தார்.

அவர் இரகசிய வாக்கெடுப்புக்குச் செல்லவேண்டும் என்றே தெரிவித்து வந்தார். நாங்கள் அரை மணி நேரத்துக்கும் அதிகம் இதுதொடர்பில் வாதிட்டு, அவருக்குத் தெரிவித்தபோதும் அவர் அவரது நிலைப்பாட்டிலே இருந்து வந்தார். மேயர் வாக்கெடுப்பை இரகசிய வாக்கெடுப்புக்கு செல்ல நாங்கள் விரும்பம் தெரிவித்தோம். அது தொடர்பான வாக்கெடுப்பை பகிரங்கமாக நடத்தவேண்டும்எனகேட்டுக்கொண்டபோதும் அவர் எமது கோரிக்கையை நிராகரித்தார். அதனால், இரகசிய வாக்கெடுப்பின் மூலமே மேயர் தெரிவை நடத்துவதற்கு நாங்கள் சம்மதித்தோம்.

வாக்கெடுப்பில் எமக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்துவந்த சிறிய கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களில் யாராவது மாறு செய்திருக்கிறார்கள். எங்களுக்குள் கருப்பு ஆடுகள் இருந்திருக்கின்றன. இவ்வான விடயங்கள் இடம்பெறுவது சாதாரண விடயமாகும். வாக்களிப்பில் எமக்கு பின்னடைவு ஏற்பட்டாலும், நாங்கள் எமது பயணத்தில் பின்வாங்கப்போவதில்லை. வரி செலுத்தும்கொழும்பு மக்களின் நல்ல விடயங்களுக்காகதொடர்ந்தும்பாடுபடுவோம். அதற்காக புதிய மேயர் முன்னெடுக்கும் நல்ல வேலைத்திட்டங்களுக்கு எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு ஆதரவளிப்போம். அதேபோன்று மக்களுக்கு விரா தமாக

தொடர்ச்சி 3 ம் பக்கம்.....

காலைக்கதிர் Kalaikkathir

## இரகசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அதற்கு எதிராக செயற்படுவதுடன், அது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் பின்வாகங்கப்போவதில்லை.

எமக்கு ஆதரவளிப்பதாக 62 பேரின் கையொப்பம் இருந்தது. இதுதொடர்பில் அரசுத்தலைவர் நேற்று முன்தினம் இரவு அவரது வீட்டில் கலந்துரையாடியுள்ளார். இதன்போது இரகசிய வாக்களிப்புக்குச் சென்றால், ஆளும்தரப்புக்கு ஆதரவாக வாக்களிப்பதாக அவர்கள் தெரிவித்திருக்கின்றனர். அதனால்தான் எப்படியாவது இரகசிய வாக்கெடுப்புக்கு செல்வதென்ற தீர்மானத்திலே அதிகாரிகள் வந்திருந்தனர். பகிரங்க வாக்களிப்பு இடம்பெற்றிருந்தால், நிச்சயமாக 62 பேரும் எங்களுக்கே வாக்களித்திருப்பார்கள். என்றாலும் நாங்கள் தோல்வியை ஏற்றுக்கொள்கிறோம். அதேநேரம் இந்த வாக்களிப்பு தொடர்பான பின்னணியை ஆராய்வோம்.

சாதாரண குடும்பத்தைச்சேந்த என்னை மேயர் பதவிக்கு நியமித்து, அதற்காக பாடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானுக்கும் என்மீது நம்பிக்கைவைத்து வாக்களித்த அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்

## அரச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என எமது கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. எனவே நாம் கோரிய தகவல்களை வழுங்க நடவடிக்கை எடுக்குமாறு தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றேன்.

தற்போது இவ்வாணைக்குழுவுக்கு தலைவர் ஒருவர் இல்லை. நீண்ட நாட்களாக இதற்கான தலைவர் ஒருவர் நியமிக்கப்படாமலிருக்கின்றார். பணிப்பாளர் சபையிலும் ஒருவர் குறைகிறார். தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவை முற்றாக இல்லாதொழிப்பதற்கு இந்த ஆளும்தரப்பு முயற்சிக்கிறதா என்ற சந்தேகம் எழுகிறது என்றார்










காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஏமாற்றும் நாடகம் வேண்டாம்

**வடக்கு மாகாணத்தில், குறிப்பாக தமிழ் மக்களின் வாழ்க்கைத் தளமாக விளங்கும் யாழ்ப்பாணத்தில் 5941 ஏக்கர் நிலங்களை அரசுடமையாக்கும் நோக்கில் வெளிவந்துள்ள வர்த்தமானி அறிவித்தல், தமிழ் மக்கள் மத்தியில் ஆழ்ந்த கவலையையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியிருந்தது.**

**இது எளிதாகக் காணப்படக்கூடிய வழக்கமான நிர்வாக நடவடிக்கை அல்ல. இது, கடந்த பல்லாண்டுகளாக நில உரிமைகளுக்காகப் போராடி வரும் தமிழர்களை மீண்டும் உரிமை இழந்த நிலையில் தள்ளும் ஒரு அரசியல் சார்ந்த நிலம் பிடிப்பு நடவடிக்கையாகவே பார்க்கப்படுகிறது.**

**இந்த நிலங்கள் பெரும்பாலும் தமிழர்களின் வாழ்வாதாரத்தை நிர்ணயிக்கும் விவசாய நிலங்களாகவோ, பரம்பரையாகத் தங்கள் வசிப்பிடங்களாகவோ விளங்குகின்றன. இந்நிலையில், இவைகளை அரசுடமையாக அறிவிப்பது என்பது மக்கள் இடையேயான நம்பிக்கையை சிதைக்கிறது. இனப் போராட்டங்களில் காயம் பெற்ற சமூகத்தில் மீள நம்பிக்கை நிலை கொள்ளப்பட வேண்டிய நேரத்தில், இவ்வாறு நில உரிமைகளை மீறி செயற்படுவது ஆபத்தான பின்விளைவுகளுக்கு வழிவகுக்கக் கூடியது.**

**இந்த அறிவித்தலுக்கெதிராக தமிழ் அரசியல் கட்சிகள், பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகள் வெளியிட்ட எதிர்ப்பு வெளிப்பாடுகள் அரசின் கவனத்துக்கு வந்திருந்தன. அதன் பின்னர், இந்த நிலங்களை அரசுடமையாக்கும் வர்த்தமானி அறிவித்தல் மீளப்பெறப்படும் என்று ஆளும்தரப்பினரால் பகிரங்க வாக்குறுதி வழங்கப்பட்டது. ஆனால், வாக்குறுதி வழங்கப்பட்டு பல வாரங்கள் கடந்தும், அந்த அறிவித்தல் இன்னும் அதிகாரப்பூர்வமாக நிறைவேற்றப்படவில்லை என்பதுதான் வேதனைக்குரியது.**

**இது ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது, சிறுபான்மையினரின் உரிமைகளை மறுக்கும் சிங்கள பௌத்த மேலாதிக்க மனப்பான்மையை பிரதிபலிக்கிறது. இனிமேல் இனவாதம் இருக்காது என்று வாக்குறுதியளித்து ஆட்சிக்கு வந்த ஒரு தரப்பு அது சகதிக்குள் உழலும் வெளிப்பாடாகத்தான் இதனை நோக்கவேண்டியுள்ளது. இது வெறும் நிலப் பிரச்சினையல்ல. தமிழர்கள் கடந்த காலத்தில் எதிர்கொண்ட அரசியல், சமூக, பொருளாதார ஒடுக்குமுறைகளின் தொடர்ச்சியாகவே இதனை மக்கள் உணருகின்றனர்.**

**இந்தப் போக்குகள் தொடரும் பட்சத்தில், மீண்டும் ஒரு இனச் சிக்கலுக்கான சூழ்நிலை உருவாகலாம். இனங்களுக்கிடையிலான அமைதி, சமதர்மம், நீதிமுறை ஆகியவைகளை நிலைநாட்ட விரும்பும் ஆளும்தரப்பு, தனது நடவடிக்கைகளில் பொறுப்புணர்வோடு இருக்கவேண்டும். குறிப்பாக தமிழ் மக்களின் மனமாற்றத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய அரசியல் சூழலில், வாக்குறுதிகளை நிரூபித்துத் தவறுகளைச் சீர்திருத்த வேண்டும்.**

**ஆளும்தரப்பு அரசியல் சீர்திருத்தங்களை வெறும் உரைகளாக அல்லாமல், செயலாக்கத்தின் வழியாக நிரூபிக்கவேண்டிய நேரம் இது. இல்லையெனில், கடந்த காலத்தின் காயங்களை மீண்டும் துலங்கவைக்கும் அரசியல் தீர்வின்மைகள், எதிர்கால அமைதிக்கான வாய்ப்புகளை அழிக்கக்கூடும்.**

# தம்புள்ளை பிரதேசசபை உறுப்பினர்கள் அறுவரை இடைநிறுத்தம் ஐ.மக்கள் சக்தி

தம்புள்ளை பிரதேச சபையில் ஆட்சியமைப்பதற்கு ஆதரவளிக்கத் தவறிய தமது கட்சி உறுப்பினர்கள் குழுவை இடைநீக்கம் செய்துள்ளது ஐக்கிய மக்கள் சக்தி.

ஐக்கிய மக்கள் சக்தியின் முகாமைத்துவ குழுவினதும் செயற்குழுவினதும் தீர்மானங்களுக்கு ஏற்ப இந்த உறுப்பினர்கள் கட்சியிலிருந்து இடைநீக்கம் செய்யப்படுகின்றனர் என்று கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார். தம்புள்ளை பிரதேச சபையில் தவிசாளர் மற்றும் உப தவிசாளரை நியமிக்கும் நடவடிக்கையில் கட்சியின் முடிவுப்படி இவர்கள் நடந்துகொள்ளாததை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய சுசில் ஹேரத், அனில் இந்திரஜித்தசநாயக்க, சம்பத் கரந்கொல்ல, குமார ரத்நாயக்க, குசுமா குமாரி மற்றும் தில்ருக்ஷி பிரேசந்திர ஆகியோரை இவ்வாறு கட்சியிலிருந்து நீக்குவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்,

# இஸ்ரேலுக்கு வேலை ஆட்களை அனுப்புவது தற்காலிக நிறுத்தம்

மத்திய கிழக்கில் தற்போதை நிலைமையை கருத்திற்கொண்டு இஸ்ரேலுக்கு இலங்கையர்களை அனுப்புவதை தற்காலிகமாக நிறுத்தி இருக்கிறோம். எதிர்வரும் நாட்களில் நிலைமையை கருத்திற்கொண்டு அது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும். அதேநேரம் இஸ்ரேல் மற்றும் ஈரானில் இருக்கும் இலங்கையர்கள் எந்த சந்தர்ப்பத்திலும் அங்குள்ள எமது தூதரங்களுடன் தொடர்புகொள்ள முடியும் என அயலுறவுத்துறை மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருன் பிரேமசந்திர தெரிவித்தார்.

அயலுறவுத்துறை பிரதி அமைச்சில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்திய கிழக்கில் இஸ்ரேல் மற்றும் ஈரான் நாடுகளுக்கிடையில் மோதல் நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கையை பொறுத்தவரை, இஸ்ரேலில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தற்போது அங்கு தொழில் செய்துவருகின்றனர். அதேபோன்று ஈரானில் 20 பேர் வரை இருப்பதாகவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எவ்வாறு இருந்தாலும் கடந்த தினங்களாக இந்த இரண்டு நாடுகளுக்கிடையுலுமான மோதல் தீவிரமடைந்துள்ளதால், அந்த வலயத்தில் விமான சேவைகள் இரதுச்செய்து, அமைதியற்ற நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் அயலுறவுத்துறை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு இது தொடர்பாக தலையீடுகளை மேற்கொண்டு ஒரு சில வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். குறிப்பாக தெஹ்ரான் மற்றும் டெல் அவியில் இருக்கும் எமது தூதரகங்களுடன் நாங்கள் நேரடியாக தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு அங்கு இடம்பெறும் விடயங்கள் தொடர்பில் கேட்டறிந்து வருகிறோம்.

அதேபோன்று அண்மை நாடுகளான டோஹா, அபுதாபி, கைரா ஆகிய நாடுகளில் இருக்கும் எமது தூதரகங்களினாலும் எமக்கு ஒத்துழைப்பு கிடைத்துவருகிறது. எமது நாட்டு மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாமல் அவர்களை பாதுகாப்பதற்கு முன்னுரிமை வழங்கி வருகிறோம். அதற்கு தேவையான ஒத்துழைப்பை தூதரங்கள் ஊடாக எங்களுக்கு கிடைத்து வருகிறது. என்றாலும் இஸ்ரேலில் தொழில் செய்துவரும் இலங்கையர்கள் இரண்டு பேருக்கும் சிறிய காயம் ஏற்பட்டுள்ளதாக எமக்கு தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது அது தொடர்பில் நாங்கள் உடடியாக செயற்பட்டு. சுகாதார பணியத்துடன் தொடர்புகொண்டு தேவையாக சிகிச்சைகளை வழங்க நடவடிக்கை எடுத்தோம்.

மேலும் விமான சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதால், அபுதாபியில் இருந்து இத்திஹாத், அமிரேட்ஸ் விமானங்கள் மூலம் டெல் அவி நோக்கி பணிக்க இருந்த பயணிகள் சிலருக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் அவர்களுக்கு தேவையான இருப்பிட வசதிகளை செய்துகா டுத்து தங்கவைத்திருக்கிறோம். அதேபோன்று படுபாயில் இருந்து இலங்கைக்கு வர இருந்த பயணிகள் பாதுகாப்பான முறையில் நாட்டுக்குதிரும்பியிருந்தார்கள். டுபாயில் தங்கவைக்கப்பட்டிருக்கும் பயணிகள் மீண்டும் இலங்கைக்கு திரும்பிவருவார்களா அல்லது டெல் அவிக்கு செல்வார்களா என இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாது.

அதேபோன்று மத்திய கிழக்கில் தற்போதை நிலைமையை கருத்திற்கொண்டு இஸ்ரேலுக்கு இலங்கையர்களை அனுப்புவதை தற்காலிகமாக நிறுத்தி இருக்கிறோம். எதிர்வரும் நாட்களில் நிலைமையை கருத்திற்கொண்டு அது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும். அதேநேரம் இஸ்ரேல் மற்றும் ஈரானில் இருக்கும் இலங்கையர்கள் எந்த சந்தர்ப்பத்திலும் அங்குள்ள எமது தூதரங்களுடன் தொடர்புகொள்ள முடியும். அது தொடர்பில் அவர்களுக்கு ஏதாவது துடங்கள் ஏற்பட்டால் அவர்கள் நேரடியாக எங்களுடன் தொடர்புகொள்ள முடியும் என்றார்.

# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# முல்லை ஓய்வு நகர்
## Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்










முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்









4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

## இலங்கையின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் உறுதியளித்தார்.

நாட்டுக்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கலாநிதி கீதா உள்ளிட்ட தூதுக்குழுவினர் அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவை நேற்று முற்பகல் அரசுத் தலைவர் செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச்சந்திப்பில்அமெரிக்காஅண்மையில் விதித்த வரிகளைப் பற்றிக் குறிப்பிட்ட அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்க இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் சுமார் 25 வீதம் அமெரிக்கானது என்பதால் அவ்வாறு வரி அதிகரிப்பதால் ஏற்படக்கூடிய தாக்கத்தையும் குறிப்பிட்டார்.

உலகளாவிய நெருக்கடிகள் காரணமாக இலங்கை எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவற்றால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் குறித்தும் அரசுத் தலைவர் இங்கு சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் இந்தச் சவால்களை செயற்திறன்மிக்கவகையில்முகாமைத்துவம் செய்வதற்கும் அவற்றின் தாக்கத்தை குறைப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசுத் தலைவர் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கு உறுதியளித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்துடனான இலங்கையின் வர்த்தக உறவு குறிப்பாக இலங்கையின் 23 வீதம் ஏற்றுமதிகளுக்கு ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கு அனுமதி வழங்கும் ஜீஎஸ்பீ+ 10 வர்த்தகச் சலுகை பற்றியும் இங்கு அவதானம் செலுத்தப்பட்டன.

முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பைவலியுறுத்தியஅரசுத்தலைவர் அநுரகுமார திசாநாயக்க முதலீட்டாளர்களின் நம்பிக்கையைஅதிகரிப்பதுபொருளாதாரத்தை மீட்டெடுக்க உதவும் என்றும் தெரிவித்தார்.

தற்போதைய ஆட்சி மக்களை மையமாகக் கொண்டது என்றும் மக்களின் அபிலாஷைகளுக்குஏற்பநாட்டைமுன்னோக்கி கொண்டுசெல்லஆளும்தரப்புஅர்ப்பணிப்புடன் உள்ளது என்றும் அரசுத் தலைவர் மீண்டும் வலியுறுத்தினார்.

இலங்கையில்தனக்குக்கிடைத்தஅமோக வரவேற்புக்கு கீதா ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்ததுடன் பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்கள் இரண்டிலும் ஆளும்தரப்பிற்குக்கிடைத்தவலுவானமக்கள் ஆதரவு அத்தியாவசிய மறுசீரமைப்புகளைச் செயல்படுத்த ஆளும்தரப்பிற்கு பலமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

கடுமையான நெருக்கடியிலிருந்து நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அடைந்த பொருளாதார வளர்ச்சியையும் மிக அதிக பணவீக்க விகிதத்திலிருந்து பணவீக்க விகிதம் குறைந்ததையும் குறிப்பிட்ட அவர் கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை அடைந்துள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையும் பாராட்டினார்.

அதேபோன்று அரச நிர்வாக மறுசீரமைப்புகளில்ஆளும்தரப்புஅடைந்துள்ள முன்னேற்றத்தைப் பாராட்டிய அவர் இந்த முயற்சிகளைநிலைநிறுத்திவிரிவுபடுத்துவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

இலங்கையின் மறுசீரமைப்பு மற்றும் மீட்சிசெயல்பாட்டில்சர்வதேசநாணயநிதியம் உறுதியான பங்காளியாக இருக்கும் என்று கோபிநாத் உறுதியளித்தார்.

தொழில்அமைச்சர்மற்றும்பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ ஜனாதிபதியின் செயலாளர்கலாநிதிநந்திகசனத்குமாநாயக்க மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கஇ ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனஇ ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஸல் அபொன்சு ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## வீதியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேதரவைத்தியசாலையில்அனுமதித்துள்ள நிலையில் அங்கு பெண் ஒருவர் உயிரிழந்தார். இதையடுத்து மற்றைய பெண்ணும் இரு சிறுமிகளும் மேலதிக சிகிச்சைக்காக களுபோவில போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். எனினும் அங்கு மற்றொரு பெண்ணும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். 45, 50 வயதுடைய பண்டாரவளை மற்றும் பேருவளைபகுதியைச்சேர்ந்தசகோதரிகள் இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த 45 வயதுடைய பெண்ணின் 11 மற்றும் 17 வயதுடைய இரு பெண் பிள்ளைகளும் தொடர்ந்தும் வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். விபத்து சம்பவத்துக்கு காரணமான 28 வயதுடைய கார் சாரதி பொலிஸாரிடம் சரணடைந்த நிலையில் கைது செய்யப்பட்டார். கைதான சந்தேகநபர் மது அருந்திய நிலையில் தனது மகளுடன் வாகனத்தில்பயணித்துள்ளமைஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் கூறுகின்றனர்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.06.2025இல் வெளியிடப்பெற்றது